# எங்கள் மாநகரம்




















TORONTO

யூலை 2002

**Tamil**

TORONTO

ரொறன்ரோ வட அமெரிக்காவில் ஐந்தாவது பெரிய மாநகரம் ஆகும். இங்கு ஏறத்தாழ 25 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இது உலகில் பல்வேறு பண்பாடுகளையும் கொண்ட மக்கள் மிகுந்து வாழும் மாநகரங்களுள் ஒன்றாகத் திகழும் பெருமை வாய்ந்தது. இங்கு பல்வேறு இனத்தவர்களும் பொருள்வளம் படைத்தவர்களும் அருகருகே, தனித்துவம் வாய்ந்த குறிச்சியினராக, தனித்துவம் வாய்ந்த சமூகத்தவராக வாழுகிறார்கள். ரொறன்ரோ வாழ் மக்கள் ஏறத்தாழ 120 மொழிகள் பேசுகிறார்கள். அவர்களுள் 51 விழுக்காட்டினர் இங்கு குடியேறியவர்கள்.

இங்கு வாழும் மக்கள் தமக்குக் கிடைக்கும் வசதிகளையும் சேவைகளையும் அறியவேண்டும் என்று மாநகராட்சி மன்றம் கேட்டுக்கொள்கிறது. அதன் மக்கள் தகவல் சேவையாகிய Access Toronto (ரொறன்ரோ உடனடித் தகவல் சேவை) மக்களுக்குத் தகவல் தெரிவித்து, அவர்களை சப்பந்தப்பட்ட தரப்புகளுடன் தொடர்புபடுத்தி வருகிறது. பொது மக்கள் நேரிலும், தொலைபேசி வாயிலாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் கேட்கும் கேள்விகளுக்கு Access Toronto பணியாளர்கள் விடை அளித்து வருகிறார்கள். Access Toronto பணியாளர்கள் வேறு மொழிகளிலும் மொழிபெயர்ப்பாளர் களின் உதவியுடன் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து வருகிறார்கள். அழைப்பு நிலையம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இயங்கி வருகிறது. பின்வரும் மாநகர நிலையங்களில் காலை 8.30 முதல் மாலை 4.30 வரை நேரில் தகவல் பெற்றுக்கொள்ளலாம்:

**Toronto City Hall**
100 Queen St. W.
(n/w corner at Bay St.)

**North York Civic Centre**
5100 Yonge St.
(3 blocks north of Sheppard Ave.)

**East York Civic Centre**
850 Coxwell Ave.
(n/w corner at Mortimer Ave.)

**Scarborough Civic Centre**
150 Borough Dr.
(north-west corner of McCowan Rd. & Ellesmere Rd.)

**Etobicoke Civic Centre**
399 The West Mall
(s/e corner at Burnhamthorpe Rd.)

**York** (Temporary Location)
1652 Keele Street
(just north of Rogers Road, west side)

**Access Toronto**
**416-338-0338**
தொலைத்தட்டெழுத்துப் பொறி: 416-338-0TTY (0889)
தொலைநகல்: 416-338-0685
இணையத் தளம்: www.toronto.ca
மின்னஞ்சல்: e-mail: accesstoronto@toronto.ca

# அவசர சேவைகள்

**♦ அவசர வைத்தியம் ....................................... 9-1-1**

**♦ நோயாளர் வாகனம்**

அவசர மருத்துவ சேவைத் துறை (EMS) அன்றாடம் மணித்தியாலங்களும் ரொறன்ரோவில் நோய் வாய்ப்படுவோருக்கு அவசர மருத்துவ சேவை அளிப்பது, அவர்களை வைத்தியசாலைகளுக்கும் ஒரு வைத்திய சாலையிலிருந்து இன்னொரு வைத்தியசாலைக்கும் ஏற்றிச் செல்வது போன்ற சேவைகளை மேற்கொண்டு வருகிறது.

*பொது விசாரிப்பு* .................................... **416-392-2000**

**♦ தீ**

தீ, சுகயீனம், விபத்து, இயற்கை அழிவு, மற்றும் பிற இடர்களால் உயிருக்கும் உடைமைக்கும் சுற்றாடலுக்கும் பாதிப்பு ஏற்படாவாறு ரொறன்ரோ தீயணைப்புச் சேவை நிலையம் பாதுகாத்து வருகிறது. வீட்டில் தீ பற்றாது பாதுகாப்பது, தீ பற்றினால் என்ன செய்ய வேண்டும் என்பவை பற்றிக் கேட்கப்படும் கேள்விகளுக்கு எமது பணியாளர்கள் மறுமொழி கூறுவார்கள்.

*பொது விசாரிப்பு* .................................... **416-338-9050**

**♦ பொலிசார்**

ரொறன்ரோ பொலிஸ் சேவைத் துறை குற்றச் செயல்களைத் தடுத்து வருகிறது. மக்களுடன் சேர்ந்து மக்களின் வாழ்விடங்களில் இடம்பெறும் சர்ச்சைகளையும் பிரச்சனைகளையும் அறிந்துகொண்டு, புரிந்துகொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது.

*பொது விசாரிப்பு* .................................... **416-808-2222**

# தகவல் சேவைகள்

**♦ ரொறன்ரோ சமூக தகவல் சேவை**

ரொறன்ரோ சமூக தகவல் சேவை 211- சேவையை நடத்தி வருகிறது. இது ஓர் இலவச பன்மொழித் தகவல் - தொடர்பு படுத்தல் சேவை. எமது பணியாளர்கள் அன்றாடம் 24 மணித்தியாலங்களும் பணியாற்றி வருகிறார்கள். ரொறன்ரோவில் கிடைக்கும் சமூக, சமூகநல, சுகாதார, அரசாங்க சேவைகள் பற்றிய விபரங்களுக்கு அழைக்கவும்: 211. அல்லது எமது இணையத் தளத்தை அணுகவும்: www.211Toronto.ca.

*பொது விசாரிப்பு* ................................................. **2-1-1**

**♦ ஒன்ராறியோ மாகாண தகவல் சேவை**

*பொது விசாரிப்பு* .................................... **416-326-1234**

**♦ கனடா அரசாங்க தகவல் சேவை**

*பொது விசாரிப்பு* ........... **1-800-O-CANADA (622-6232)**

# மாநகராட்சி மன்றம் வழங்கும் சேவைகள்

## ♦ விலங்குநல சேவைகள்




செல்லப் பிராணிகள் வளர்ப்பதற்கு உத்தரவுப் பத்திரம் வழங்குவது, அவற்றைப் பதிவு செய்வது, வழிதவறும் விலங்குகளையும் காயப்படும் விலங்குகளையும் எடுத்துச் செல்வது, ரொறன்ரோ மாநகரைச் சூழ்ந்து வசிக்கும் விலங்குவகைகள் குறித்து புத்திமதியும் தகவலும் கூறுவது போன்ற பணிகளை ரொறன்ரோ விலங்குநல சேவைத் துறை மேற்கொண்டுள்ளது.

*பொது விசாரிப்பு*..............**416-338-PAWS (7297)**

## ♦ கலை, பண்பாடு, பாரம்பரியம்



ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் ரொறன்ரோ மாநகரின் பண்பாட்டு வாழ்வில் தலையாய பங்கு வகிக்கிறது. அரும்பொருளகங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், கலை-காட்சிக் கூடங்கள் போன்றவற்றை இயக்கி, நிருவகிப்பது பண்பாட்டுப் பகுதியின் பொறுப்பு. பண்பாட்டுப் பணிகளுக்கும் தனிப்பட்ட கலைஞர்களுக்கும் அது பொருளுதவி புரிகிறது. பல்வேறு சமூகக் கலை அமைப்புகளுக்கும் அது உதவி புரிகிறது. மாநகராட்சி மன்ற சேவைகளையும் வசதிகளையும் வழங்குவதிலும் அது பங்கு பற்றுகிறது.

*பொது விசாரிப்பு* ...........................**416-392-8674**

## ♦ பிறப்பு பதிவு




வைத்தியசாலைகள் பெற்றோருக்கு "குழந்தை உயிர்-பிறப்புக் கூற்று" படிவங்களை வழங்கி வருகின்றன. குழந்தை பிறந்த திகதி முதல் ஒரு வயது வரை பிறப்பைப் பதிந்து, ஒன்ராறியோ மாகாண பதிவாளர்-அதிபதிக்கு அனுப்பி வைப்பதில் மாநகராட்சி மன்றப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள். ஒரு வயதுக்கு மேற்பட்டவர்களின் பிறப்புப் பதிவுகள் நேரடியாக ஒன்ராறியோ மாகாண பதிவாளர்-அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட் வேண்டும். புதுக்கப் பிறந்த பிள்ளையுடன் பயணம் செய்ய நேரும் பெற்றோர் இன்னும் ஒன்ராறியோ மாகாணத்திலிருந்து ஒரு பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளாவிட்டால், மாநகராட்சி மன்ற எழுதுநரின் அலுவலக்துக்குச் சென்று பயணக் கடிதம் (பகுதிப் பதிவாளர் கூற்று) ஒன்றைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். பெற்றோர் தமது படத்துடன் கூடிய அடையாளப் பத்திரத்தைக் காட்டி, கட்டணம் செலுத்தி இதனைப் பெற்றுக் கொள்ளலாம். பிறப்புச் சான்றிதழ்களைப் பதிவாளர்-அதிபதி ஊடாகக் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

*பொது விசாரிப்பு*
**(Access Toronto)**.......................**416-338-0338**

## ♦ கட்டட அனுமதிப் பத்திரம், வலயத் தகவல்



ஒரு கட்டடத்தை அமைப்பதற்கு அல்லது இடிப்பதற்கு அனுமதிப் பத்திரம் தேவை. அதாவது மாநகராட்சி மன்றப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட வலய உபவிதிகளை ஆராய்ந்து ஒரு புதிய கட்டடத்தை அமைப்பதற்கு அல்லது ஒரு வீட்டையோ கட்டடத்தையோ அகட்டுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு முன்வைக்கப்படும் திட்டங்களை அனுமதிப்பார்கள்.

*பொது விசாரிப்பு*
**(Access Toronto):** ....................**416-338-0338**

## ♦ வியாபாரம்




**வியாபாரம்/விற்பனை உத்தரவுப் பத்திரம்:** வாடகை வாகனச் சாரதிகள், உரிமையாளர்கள் உட்படப் பல்வேறு வியாபார, விற்பனை நிலையத்தவர்களுக்கு உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதிலும், அவர்களை சம்பந்தப்பட்ட மாநகர உபவிதிகளுக்கு அமைந்தொழுகச் செய்வதிலும் மாநகராட்சி மன்ற உத்தரவுப் பத்திரம் வழங்கல்-நியமங்கள் பகுதி ஈடுபட்டுள்ளது.

*பொது விசாரிப்பு*.............................**416-392-3082**



**புதிய தொழில் முயற்சிகள்:** தொழில் முயற்சி திட்டமிடல், விற்பனை, நிதிவளம் குறித்து கேட்கப்படும் திட்டவட்டமான கேள்விகளுக்கு விடை அளிக்கவல்ல அனுபவம் வாய்ந்த மதியுரைஞர்கள் ரொறன்ரோ தொழில் முயற்சி (Enterprise Toronto) தாபனத்தில் பணியாற்றுகிறார்கள். தொழில் முயற்சி பற்றிய உத்தேசங்களை மதிப்பிடுவதற்கும், தொழில் முயற்சித் திட்டங்களை மீள்நோக்குவதற்கும், இயங்கிவரும் தொழில் முயற்சிகளை மேம்படுத்தும் வழிவகைகளை ஆராய்வதற்கும் எமது பணியாளர்களால் தொழில் அதிபர்களுக்கு உதவ முடியும். உத்தரவுப் பத்திரங்கள், அனுமதிப் பத்திரங்கள், வலயங்கள், நிதிவசதி வாய்ப்புகள் பற்றிய விபரங்களையும் அவர்களால் வழங்க முடியும்.

*பொது விசாரிப்பு* ...........................**416-395-7434**


## ♦ சிறுவர் பராமரிப்பு



ரொறன்ரோ மாநகர சிறுவர் பராமரிப்பு சேவைகளை சிறுவர் சேவைப் பகுதி மேற்கொண்டு வருகிறது. சிறுவரைக் கூட்டாக அல்லது தனிப்பட்ட வீட்டில் வைத்துப் பராமரிப்பதற்கு உத்தரவுப் பத்திரம் பெற்றவர்கள் பற்றிய விபரங்களை நாடும் குடும்பங்களுக்கு அவற்றை வழங்குவது, அவர்களைத் தொடர்புபடுத்துவது, பாடசாலை செல்வதற்கு முன்னரும் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய பின்னரும் சிறுவர்களைப் பராமரித்தல், கோடைகால பகல்-முகாமில் சிறுவர் பராமரிப்பு, குடும்ப


உதவிச் சேவைகள், தனி வசதி தேவைப் படுவோருக்கான சேவைகள் பற்றிய விபரங்களையும் இந்தப் பகுதி வழங்கி வருகிறது. தகுதி உடையவர்களுக்கு சிறுவர் பராமரிப்பு நிதியுதவி அளிக்கும் திட்டத்தையும் அது மேற்கொண்டுள்ளது.
*பொது விசாரிப்பு* ................**416-392-KIDS (5437)**

## ♦ கல்வி





பாடசாலைகள் ஒன்ராறியோ மாகாண கல்வி அமைச்சின் அதிகார வரம்புக்கு உட்பட்டவை. ரொறன்ரோவில் இயங்கும் மிகப்பெரிய பாடசாலைச் சபைகள் இரண்டு: ரொறன்ரோ மாநகர பாடசாலைச் சபை, ரொறன்ரோ மாநகர கத்தோலிக்க பாடசாலைச் சபை. ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கற்கும் வசதிகள், கல்வித் தரத்தை உயர்த்தும் வாய்ப்புகள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பாடசாலைச் சபையில் பணிபுரிவோர் உதவி புரிவார்கள்.
*பொது விசாரிப்பு*
**(Access Toronto)**.......................**416-338-0338**

## ♦ தேர்தல்




2003 நவம்பர் 10ம் திகதி மாநகராட்சி மன்றத்துக்கும், பாடசாலைச் சபைக்குமான தேர்தல்கள் இடம்பெறும். பொது மக்கள் 2003 செப்டெம்பர் 2 முதல் ரொறன்ரோ மாநகர மண்டபத்திலும் மாநகர நிலையங்களிலும் வாக்காளர் பட்டியலைப் பார்வையிடலாம். வாக்களிக்கத் தகுதி உடையவர்கள் வாக்காளர் பட்டியலில் தமது பெயர் சேர்க்கப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். 18 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் கொண்டவர்காளாகவும், ரொறன்ரோ மாநகரத்தில் வாழ்பவர்காளாகவும் அல்லது சொந்த வளவோ வாடகை வளவோ கொண்டவர்களாகவும் விளங்கும் கனடியக் குடிமக்கள் வாக்களிக்கத் தகுதி உடையவர்கள். அவர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும்.
*பொது விசாரிப்பு*...............................**416-395-7304**

## ♦ குப்பை, மீள்பாவனை



உருப்படிக் கழிவு முகாமைச் சேவைப் பகுதி குப்பை வகைகளைச் சேகரித்து, கைதீர்த்து வருகிறது. மீள்பாவனைப் பொருட்களையும் வீட்டுத் தோட்டக் கழிவுகளையும் சேகரித்து, படிமுறைசெய்து, கலப்புரமாக்கி வருகிறது. மீள்பாவனை மூலம் எவ்வாறு குப்பையைக் குறைக்கலாம் என்று எமது பணியாளர்கள் உங்களுக்குச் சொல்லித் தருவார்கள்.
*பொது விசாரிப்பு*
**(Access Toronto)**.......................**416-338-0338**

## ♦ சுகாதார சேவைகள்




ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை சமூகத்துக்குப் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகிறது. அது புதிய தாய்மாருக்கும் பல் பராமரிப்பதற்கும் உதவி புரிதல், போதைப்பொருள் பாவனையைத் தடுத்துப் புத்திமதி கூறுதல், தடுப்பூசி ஏற்றுதல், உணவகங்கள் பார்வையிடல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளது.
***ரொறன்ரோ சுகாதார இணைப்புகள்*416-338-7600**

## ♦ வசிப்பிட வசதி



**கட்டுபடியாகத்தக்க வசிப்பிட வசதி:** ரொறன்ரோ சமூக வசிப்பிடவசதிக் கூட்டுத்தாபனம் குறைந்த அல்லது மிதமான வருமானம் கொண்ட தனியாட்களுக்கும், குடும்பங்களுக்கும் முதியோருக்கும் தரமான, கட்டுபடியாகத்தக்க வசிப்பிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்கிறது. சில வசிப்பிடக் கூறுகள் இயலாதவர்களுக்காக வடிவமைக்கப்பட்டவை. வசிப்பிட வசதிகள் அனைத்தையும் குறித்து நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு ரொறன்ரோ சமூக வசிப்பிட வசதிக்கான தொலைபேசி இணைப்புகள் மூலம் ரொறன்ரோ சமூக வசிப்பிடவசதிக் கூட்டுத்தாபனம் விடை அளிக்கும்.
*பொது விசாரிப்பு* .........................**416-392-6111**




**அவசரகால புகலிடம்:** அவசரகால சூழ்நிலைகளில் தனியாட்களுக்கும் குடும்பங்களுக்கும் புகலிடம் வழுங்குவதை இலக்காக் கொண்டே புகலிட-வசிப்பிட-ஆதரிப்புப் பகுதி இயங்கி வருகிறது. வேண்டிய வேளைகளில் பணியாளர்கள் மக்களுக்குத் துணைநின்று வழிகாட்டுவர்.
*பொது விசாரிப்பு*............................**416-397-5637**



**நெடுங்கால பராமரிப்பு வசதிகள்:** சமூகத்தில் தாங்களாகவே வாழ முடியாதவர்களுக்கு வயோதிபர் அகங்கள் பகுதி நெடுங்கால பராமரிப்பு வழங்கி வருகிறது. மக்கள் தமது அகங்களில் இயன்றளவு நீண்ட காலத்துக்குத் வசிக்க உதவும் பொருட்டு அவர்களுக்கு அவசரகால பராமரிப்பு, வயது வந்தோர்-பகல்வேளைப் பராமரிப்பு, உணவு வினியோகம், சமூகநல உதவி, அவசரகால உதவி, விடுமுறைக்கால பராமரிப்பு போன்ற உதவிகள் செய்யப்படுகின்றன.
*பொது விசாரிப்பு* .....................**416-392-8906**




**பழுதுபார்த்தல்-பேணல்:** உங்கள் மாடியகத்தில் அல்லது மாடியகக் கட்டடத்தின் பொது இடங்களில் எதையாவது பழுதுபாரக்க வேண்டி நேரக்கூடும். செப்டம்பர் 15 முதல் யூன் 1 வரை உங்கள் மாடியகத்தில் வெப்பம் 21°C அளவுக்குக் கீழே குறையக்கூடும். அத்தகைய சூழ்நிலைகளில் மாநகராட்சி மன்ற உத்தரவுச் சீட்டு-நியமப் பகுதி உங்களுக்கு உதவும்.
*பொது விசாரிப்பு*
**(Access Toronto)** ....................... **416-338-0338**



**வாடகைக் குடியிருப்பு சர்ச்சைகள்:** வாடகைக்குத் தங்குவதற்கு இடம் கொடுத்தவர் அல்லது வாடகைக்குக் குடியிருப்பவர் என்ற வகையில் நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், பின்வரும் பொது விசாரிப்பு இலக்கத்தின் வாயிலாக உங்களுக்கு அறிவுரை கூறி உதவக்கூடிய அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களை அறியவும்.
*பொது விசாரிப்பு* ............................ **416-397-4502**

## ♦ நூலகம்




றொறன்ரோ பொது நூலத்துக்கு 98 கிளைகள் உள்ளன. அவற்றின் நூல்கள், வீடியோ, சி.டி., டி.வி.டி., சஞ்சிகைகள், பத்திரிகைகள், 100க்கு மேற்பட்ட மொழிகளில் உள்ள வேறு ஆக்கங்கள் எல்லாவற்றினதும் எண்ணிக்கை ஏறத்தாழ 1 கோடி 20 இலட்சம் ஆகும். இலவச நூலக அட்டைகள், கணினி வாயிலான தரவுகள், வேகம் மிகுந்த இணைய இணைப்பு, மின்னஞ்சல் வசதிகள் அனைத்துக் கிளைகளிலும் கிடைக்கும். மாநகரத்தின் பொருளுதவியுடன் இடம்பெறும் நிகழ்ச்சிகள், திட்டங்கள் பற்றிய விபரங்களும் கிடைக்கும். விருது பெற்ற நூல்கள், விற்பனை மிகுந்த நூல்கள் அடங்கிய *Best Bets* என்ற திரட்டைச் சென்று பார்க்கவும். அவற்றைக் குறுகிய காலத்துக்கு இரவல் பெறலாம். எமது இணையத் தளத்தை அணுகவும்: www.tpl.toronto.on.ca.
*பொது விசாரிப்பு* ............................ **416-393-7131**

## ♦ திருமண உத்தரவுப் பத்திரம்




ஒன்ராறியோவில் பெற்றாரின் சம்மதமின்றித் திருமணம் செய்பவர் 18 வயதினராக அல்லது அதற்கு மேற்பட்ட வயதினராக இருக்க வேண்டும். அத்துடன் ஒரு திருமண விண்ணப்பப் படிவத்தை நிரப்பி ஒப்பமிட வேண்டும் (விண்ணப்பப் படிவத்தை மாநகர மண்டபத்தில் அல்லது மாநகர நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம், அல்லது எமது இணையத் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்). அதற்கு மூலப் பிறப்புச் சான்றிதழ், படத்துடன் கூடிய ஓர் அடையாளப் பத்திரம் அல்லது தற்போது செல்லுபடியாகும் (படத்துடன் கூடிய) கடவுச்சீட்டு தேவைப்படும். திருமணம் புரிவதற்கு வதிவுரிமையோ குடியுரிமையோ தேவையில்லை. திருமண உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குச் செல்லுபடியாகும். மாநகர மண்டபத்திலும், எற்றோபிக்கோ மாநகர நிலையம் தவிர்ந்த ஏனைய மாநகர நிலையங்களிலும் திருமண சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
*பொது விசாரிப்பு*
**(Access Toronto)** ....................... **416-338-0338**

## ♦ வாகன தரிப்பிட வசதி




**இயலாதோர் வாகன தரிப்பிட வசதி:** நடக்கச் சிரமப்படுவோர் இயலாதோர் வாகன தரிப்பிட அனுதிப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்கலாம். அதற்குரிய விண்ணப்பப் படிவத்தை ஒன்ராறியோ போக்குவரத்து அமைச்சு-சாரதிகள் உத்தரவுப் பத்திர அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
*பொது விசாரிப் பு*
**(Access Toronto)** ....................... **416-338-0338**



**வீதி-வாகன தரிப்பிட அனுமதிப் பத்திரம்:** றொறன்ரோ வதிவிட- வாகன தரிப்பிட அனுமதிப் பத்திரத் திட்டத்தின்படி சில பகுதிகளில் (பொதுவாக சொந்த வாகன பாதை அல்லது வாகனக் கூடம் அற்றவர்களுக்கு) வீதி-வாகன தரிப்பிட வசதி அளிக்கப்படுகிறது. அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் தமது வாகனங்களை அங்கு இரவு முழுவதும் நிறுத்தி வைக்கலாம். அவர்களுக்கு ஒரு, இரு, மூன்று மணித்தியால வாகன தரிப்புக் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்படும்.
*பொது விசாரிப்பு* ............................ **416-392-7873**



**வாகன தரிப்பிட மீட்டர்கள், பகுதிகள்:** குறிப்பிட்ட பகுதிகளிலும் வீதிகளிலும் பொருத்தப்பட்டுள்ள வாகன தரிப்பிட மீட்டர்களை றொறன்ரோ வாகன தரிப்பிட அதிகாரபீடம் கவனித்து வருகிறது. உங்கள் வாகனங்களை அனுமதிக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் நிறுத்தி வைப்பதன் மூலம் குற்றச் சீட்டு வைக்கப்படாது பார்த்துக் கொள்வதில் கவனமாக இருக்கவும் (அங்கெல்லாம் உரிய விபரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன).
*பொது விசாரிப்பு* ............................ **416-393-7275**



**வாகன தரிப்பு-குற்றச் சீட்டுகள்**: வாகன தரிப்பு-குற்றச் சீட்டுக் கொடுப்பனவைத் தொலைபேசி, தபால், வங்கி மூலம் செலுத்தலாம். மற்றும்படி என்ன செய்யலாம்

என்பதற்குச் சீட்டின் பின்புறத்தைப் பார்க்கவும்.
*பொது விசாரிப்பு*.............. **416-397-TAGS (8247)**

## ♦ சோலைகள் / பொழுதுபோக்கு / சனசமூக நிலையங்கள்



**பொழுதுபோக்குத் திட்டங்கள்**
ரொறன்ரோ சோலைகள்-பொழுதுபோக்குத் துறை இந்த மாநகரம் முழுவதும் அமைந்துள்ள பற்பல சனசமூக நிலையங்களின் மூலமாகவும் வெவ்வேறு வயதினர்க்கும் பல்வேறு பொழுதுபோக்குத் திட்டங்களை முன்வைத்து வருகிறது. அத்துடன் நீச்சல் தடாகங்கள், விளையாட்டு அரங்குகள் போன்றவற்றையும் நிருவகித்து வருகிறது. எடுத்துக்காட்டுகள்: நீச்சல், பனிசறுக்கு, விளையாட்டுகள், உடலுறுதி, முகாங்கள், முதியோர் திட்டங்கள்.



**சோலைகள்**
சோலைகள்-பொழுதுபோக்குத் துறை இந்த மாநகரத்தின் சோலைகளையும் விளையாட்டுத் திடல்களையும் நிருவகித்து வருகிறது. அவற்றை அவ்வப்போது நீங்களும் பாவிக்கலாம். அங்கு பெரிய அளவில் கூடிப் பொழுதுபோக்குவதற்கு அல்லது பந்தாடுவதற்கான அனுமதிப் பத்திரம் நாடி விண்ணப்பிக்கலாம்.
*பொது விசாரிப்பு*............... **416-338-4FUN (4386)**

## ♦ சமூகநல உதவி




சமூக சேவைகள் பகுதி தனிப் பெற்றாருக்கு வேலைவாய்ப்பு உதவி, வீடமைப்பு உதவி, நிதி உதவி உட்படப் பல்வேறு உதவித் திட்டங்களையும் சேவைகளையும் மேற்கொண்டுள்ளது.
*பொது விசாரிப்பு*............................ **416-392-2956**

## ♦ வரிகள்




இந்த மாநகரம் சொத்து வரிப் பணத்தைக் கொண்டு இச்சிற்றிதழில் குறிப்பிடப்பட்டவை போன்ற இன்றியமையாத பொதுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. வரி அறவீட்டுச் சீட்டுகள் ஆண்டுக்கு இரு தடவைகள், ஜனவரி, யூன் மாதங்களில், கடித மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.
*பொது விசாரிப்பு*............... **416-338-4TAX (4829)**

## ♦ போக்குவரத்து



**ரொறன்ரோ பேக்குவரத்து ஆணையகம் (TTC):** கிழமையில் ஏழு நாட்களும், அன்றாடம் 24 மணித்தியாலங்களும் ரொறன்ரோ மாநகரம் முழுவதும் விரைவாகவும் இதமாகவும் பத்திரமாகவும் பயணம் செய்வதற்கு எமது பொது போக்குவரத்துச் சேவை உதவுகிறது. சுரங்கப் புகையிரத சேவையும் பேருந்து, தண்டவாளப் பேருந்து, குறுகிய தண்டவாளப் போக்குவரத்து மார்க்கங்களும் ஒருங்கிணைந்து பயணிகளை ஒரே கட்டணத்துடன் இந்த மாநகரத்தின் எந்த இடத்துக்கும் கொண்டுசெல்கின்றன. இயலாத பயணிகளும் நடமாட்டம் பாதிக்கப்பட்ட பயணிகளும் TTC மூலம் சில்லுக் கதிரையுடன் ஏறிப் பயணம் செய்ய ஒழுங்கு செய்யலாம்.
*பொதுவிசாரிப்பு*................. **416-393-INFO (4636)**




**கோ (GO) போக்குவரத்துச் சேவை:** GO புகையிரதங்களும் GO பேருந்துகளும் TTC உட்பட பாரிய ரொறன்ரோ பிராந்தியத்தில் அமைந்துள்ள அனைத்து மாநகரப் போக்குவரத்துச் சேவைகளுடனும் ஒருங்கிணைந்து இயங்கி வருகிறது.
*பொது விசாரிப்பு*............................ **416-869-3200**

## ♦ மரங்கள்



ரொறன்ரோ மரங்கள் நிறைந்த ஒரு மாநகரம். மாநகர வளவுகளிலும் தனியார் வளவுகளிலும் மரங்கள் நாட்டப்படுவதை நாம் ஊக்குவித்து வருகிறோம். மாநகர உபவிதிகள், மரங்களைப் பேணல் என்பன குறித்து எமது பணியாளர்கள் விபரம் கூறுவார்கள்.
*பொது விசாரிப்பு*............... **416-338-TREE (8733)**

## ♦ நீர்



நீங்கள் குடிப்பதற்கும், குளிப்பதற்கும், சமைப்பதற்கும், வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தும் நீரை எமது பணியாளர்கள் சுத்திகரித்தே உங்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறார்கள். நீங்கள் கழிகால் வழியே பீற்றியடிக்கும் நீரையும் அவர்கள் படிமுறையிட்டே ஒன்ராறியோ வாவிக்குள் செலுத்தி விடுகிறார்கள்.
*பொது விசாரிப்பு*............................ **416-392-4546**
*நீர்க் கட்டண விசாரிப்பு*............... **416-338-4829**

## மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள்

*ரொறன்ரோ உடனடித் தகவல் சேவை (Access Toronto)பணியாளர்கள் யார் உங்கள் மாநகர மன்றாளர் என்று தெரிவிப்பார்கள்.*

*Access Toronto சேவையை அழைக்கவும்: 416-338-0338.*

*அஞ்சல் முகவரி:*
Toronto City Hall
100 Queen St. W., 2nd floor
Toronto ON M5H 2N2

**மன்ற வரவேற்பு அலுவலகம்:**
416-392-7937

மின்னஞ்சல்: councillor_lastname@toronto.ca
(எடுத்துக்காட்டு: councillor_hall@toronto.ca)

---

மாநகராதிபதி **LASTMAN** 416-395-6464/தொலைநகல்:416-395-6440
மின்னஞ்சல்: mayor_lastman@toronto.ca

---

**வட்டாரம் 1 - ETOBICOKE NORTH**
மன்றாளர் Suzan Hall
கூடம் C54 ...............416-392-0205 / தொலைநகல்: 416-392-4120

**வட்டாரம் 2 - ETOBICOKE NORTH**
மன்றாளர் Rob Ford
கூடம் C40 ...............416-397-9255 / தொலைநகல்: 416-397-9238

**வட்டாரம் 3 - ETOBICOKE CENTRE**
மன்றாளர் Doug Holyday
கூடம் B29................416-392-4002 / தொலைநகல்: 416-392-4121

**வட்டாரம் 4 - ETOBICOKE CENTRE**
மன்றாளர் Gloria Lindsay Luby
கூடம் B38................416-392-1369 / தொலைநகல்: 416-696-4138

**வட்டாரம் 5 - ETOBICOKE-LAKESHORE**
மன்றாளர் Peter Milczyn
கூடம் C51 ............... 416-392-4040/ தொலைநகல்: 416-392-4127

**வட்டாரம் 6 - ETOBICOKE-LAKESHORE**
மன்றாளர் Irene Jones
கூடம் C48 ...............416-397-9273 / தொலைநகல்: 416-696-4211

**வட்டாரம் 7 - YORK WEST**
மன்றாளர் George Mammoliti
கூடம் B27................416-395-6401 / தொலைநகல்: 416-696-4218

**வட்டாரம் 8 - YORK WEST**
மன்றாளர் Peter Li Preti
கூடம் C41 ...............416-392-0201 / தொலைநகல்: 416-696-4144

**வட்டாரம் 9 - YORK CENTRE**
மன்றாளர் Maria Augimeri
கூடம் C53 ...............416-392-4021 / தொலைநகல்: 416-392-7109

**வட்டாரம் 10 - YORK CENTRE**
மன்றாளர் Michael Feldman
கூடம் A22................416-392-1371 / தொலைநகல்: 416-392-7299

**வட்டாரம் 11 - YORK SOUTH-WESTON**
மன்றாளர் Frances Nunziata
கூடம் C49 ...............416-392-4091 / தொலைநகல்: 416-392-4118

**வட்டாரம் 12 - YORK SOUTH-WESTON**
மன்றாளர் Frank Di Giorgio
கூடம் B32 ...............416-392-4066 / தொலைநகல்: 416-392-1675

**வட்டாரம் 13 - PARKDALE-HIGH PARK**
மன்றாளர் David Miller
கூடம் C46 ...............416-392-4072 / தொலைநகல்: 416-696-3667

**வட்டாரம் 14 - PARKDALE-HIGH PARK**
மன்றாளர் Chris Korwin-Kuczynski
கூடம் A4 .................416-392-7919 / தொலைநகல்: 416-392-0398

**வட்டாரம் 15 - EGLINTON-LAWRENCE**
மன்றாளர் Howard Moscoe
கூடம் B30 ...............416-392-4027 / தொலைநகல்: 416-392-4191

**வட்டாரம் 16 - EGLINTON-LAWRENCE**
மன்றாளர் Anne Johnston
கூடம் A9 .................416-392-4090 / தொலைநகல்: 416-392-4129

**வட்டாரம் 17 - DAVENPORT**
மன்றாளர் Betty Disero
கூடம் B37 ...............416-392-7011 / தொலைநகல்: 416-392-0212

**வட்டாரம் 18 - DAVENPORT**
மன்றாளர் Mario Silva
கூடம் C42 ...............416-392-7012 / தொலைநகல்: 416-392-7957

**வட்டாரம் 19 - TRINITY-SPADINA**
மன்றாளர் Joe Pantalone
கூடம் C47 ............ ...416-392-4009 / தொலைநகல்: 416-392-4100

**வட்டாரம் 20 - TRINITY-SPADINA**
மன்றாளர் Olivia Chow
கூடம் C50 ...............416-392-4044 / தொலைநகல்: 416-392-4130

**வட்டாரம் 21 - ST. PAUL'S**
மன்றாளர் Joe Mihevc
கூடம் B35 ...............416-392-0208 / தொலைநகல்: 416-392-7466

**வட்டாரம் 22 - ST. PAUL'S**
மன்றாளர் Michael Walker
கூடம் B26 ...............416-392-7906 / தொலைநகல்: 416-392-0124

**வட்டாரம் 23 - WILLOWDALE**
மன்றாளர் John Filion
Suite B36 ...............416-392-0210 / தொலைநகல்: 416-392-7388

**வட்டாரம் 24 - WILLOWDALE**
மன்றாளர் David Shiner
கூடம் B39 ...............416-395-6413 / தொலைநகல்: 416-397-9290

**வட்டாரம் 25 - DON VALLEY WEST**
மன்றாளர் Joanne Flint
கூடம் A12 ...............416-395-6408 / தொலைநகல்: 416-395-6439

**வட்டாரம் 26 - DON VALLEY WEST**
மன்றாளர் Jane Pitfield
கூடம் A13 ...............416-392-0215 / தொலைநகல்: 416-392-7427

**வட்டாரம் 27 - TORONTO CENTRE-ROSEDALE**
மன்றாளர் Kyle Rae
கூடம் A5 .................416-392-7903 / தொலைநகல்: 416-696-4300

**வட்டாரம் 28 - TORONTO CENTRE-ROSEDALE**
மன்றாளர் Pam McConnell
கூடம் A6 .................416-392-7916 / தொலைநகல்: 416-392-7296

வட்டாரம் **29 - TORONTO-DANFORTH**
மன்றாளர் Case Ootes
கூடம் C45 ...............416-392-4032 / தொலைநகல்: 416-392-4123

வட்டாரம் **30 - TORONTO-DANFORTH**
மன்றாளர் Jack Layton
கூடம் C44 ...............416-392-4060 / தொலைநகல்: 416-397-5200

வட்டாரம் **31 - BEACHES-EAST YORK**
மன்றாளர் Michael Tziretas
கூடம் C56 ...............416-392-4035 / தொலைநகல்: 416-397-9289

வட்டாரம் **32 - BEACHES-EAST YORK**
மன்றாளர் Sandra Bussin
கூடம் B28................416-392-1376 / தொலைநகல்: 416-392-7444

வட்டாரம் **33 - DON VALLEY EAST**
மன்றாளர் Paul Sutherland
கூடம் A14................416-392-4038 / தொலைநகல்: 416-392-4101

வட்டாரம் **34 - DON VALLEY EAST**
மன்றாளர் Denzil Minnan-Wong
கூடம் C57 ...............416-397-9256 / தொலைநகல்: 416-397-4100

வட்டாரம் **35 - SCARBOROUGH SOUTHWEST**
மன்றாளர் Gerry Altobello
கூடம் B25................416-392-0213 / தொலைநகல்: 416-392-7394

வட்டாரம் **36 - SCARBOROUGH SOUTHWEST**
மன்றாளர் Brian Ashton
கூடம் A11................416-392-4052 / தொலைநகல்: 416-696-3658

வட்டாரம் **37 - SCARBOROUGH CENTRE**
மன்றாளர் Lorenzo Berardinetti
கூடம் B24 ...............416-397-9274 / தொலைநகல்: 416-397-9280

வட்டாரம் **38 - SCARBOROUGH CENTRE**
மன்றாளர் Brad Duguid
கூடம் B31 ...............416-392-0204 / தொலைநகல்: 416-392-7428

வட்டாரம் **39 - SCARBOROUGH-AGINCOURT**
மன்றாளர் Sherene Shaw
கூடம் A1 .................416-392-1374 / தொலைநகல்: 416-392-7431


வட்டாரம் **40 - SCARBOROUGH-AGINCOURT**
மன்றாளர் Norm Kelly
கூடம் C43 ...............416-392-4047 / தொலைநகல்: 416-696-4172

வட்டாரம் **41 - SCARBOROUGH-ROUGE RIVER**
மன்றாளர் Bas Balkissoon
கூடம் A10 ...............416-392-1375 / தொலைநகல்: 416-392-1050

வட்டாரம் **42 - SCARBOROUGH-ROUGE RIVER**
மன்றாளர் Raymond Cho
கூடம் B23 ...............416-392-4078 / தொலைநகல்: 416-696-4159

வட்டாரம் **43 - SCARBOROUGH EAST**
மன்றாளர் David Soknacki
கூடம் C52 ...............416-392-4008 / தொலைநகல்: 416-392-4006

வட்டாரம் **44 - SCARBOROUGH EAST**
மன்றாளர் Ron Moeser
கூடம் B33 ...............416-392-1373 / தொலைநகல்: 416-392-7429



Ten przewodnik na temat programów i usług świadczonych przez rząd miejski Miasta Toronto dostępny jest również w języku polskim.

La presente guida ai programmi e ai servizi forniti dalla amministrazione municipale della Città di Toronto è disponibile anche in Italiano.

Ce guide des programmes et services offerts par l'administration municipale de la ville de Toronto est également disponible en français.

Este guia de programas e serviços prestados pelo governo autárquico da cidade de Toronto encontra-se igualmente disponível em português.

Esta guía de programas y servicios que proporciona el gobierno municipal de la Ciudad de Toronto puede obtenerse también en español.

Ang gabay na ito sa mga programa at serbisyo ng pamahalaang bayan ng Lungsod ng Toronto ay inihahatid din sa inyo sa bersyong Tagalog.

多倫多市政府的服務指南亦備有中文版本。

ਪ੍ਰੋਗਰਾਮਾਂ ਤੇ ਸੇਵਾਵਾਂ ਬਾਰੇ ਇਹ ਗਾਈਡ (ਜਾਣਕਾਰੀ ਪੁਸਤਕ) ਜਿਹੜੀ ਸਿਟੀ ਆਫ਼ ਟੋਰਾਂਟੋ ਦੇ ਮਿਊਨਿਸਪਲ ਪ੍ਰਸ਼ਾਸਨ ਵਲੋਂ ਪਹੁੰਚਾਈ ਜਾ ਰਹੀ ਹੈ, ਪੰਜਾਬੀ 'ਚ ਵੀ ਪ੍ਰਾਪਤ ਹੋ ਸਕਦੀ ਹੈ।

ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் மேற்கொள்ளும் திட்டங்களுக்கும் சேவைகளுக்கும் வழிகாட்டும் இச்சிற்றிதழ் தமிழிலும் கிடைக்கும்.

Tập hướng dẫn này, về các chương trình và dịch vụ do chính quyền thành phố Toronto cung cấp, có được in bằng tiếng Việt.

Ο παρόν οδηγός προγραμμάτων και υπηρεσιών του Δήμου του Τορόντο διατίθεται και στην ελληνική.

# ACCESS TORONTO

# 416-338-0338


TTY: 416-338-0TTY (0889)  Fax: 416-338-0685

web: www.toronto.ca

e-mail: accesstoronto@toronto.ca



Designed: Toronto Corporate Communications

02R63-802